மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் விடை அளித்தது, குடியிருப்பு பகுதிகளுக்குண்டான பட்டா வழங்குவது குறித்ததான கோரிக்கையாகும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோருவது விவசாய நிலங்களைப் பற்றிய குறிப்பாகும். அதற்குண்டான தனி வினாவை அவர்கள் போடுவார்களேயானால், அதற்கு நான் விடையளிக்க கடமைப்பட்டிருக்கின்றேன்.

திரு. ஜே. ஹேமச்சந்திரன்: அதாவது, அங்கே தங்கி இருக்கின்றவர்களுக்கு Revenue Department–லிருந்து B–Memo கொடுக்கப் பட்டிருக்கின்றது. அதனாலேதான், அவர்களுடைய உரிமை அங்கே வருகிறது. மேலும், அவர்கள் பட்டாவிற்காக மனுக்களும் கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பட்டாவிற்கான மனுக்கள் பெண்டிங்கிலே இருக்கின்ற நேரத்திலே வனத் துறை அங்கே வந்து அவர்களுடைய வாழ்க்கையை சின்னாபின்னமாக்குகின்ற நிலைகுறித்து நடவடிக்கை எடுப்பதற்கு ரெவின்யூ துறை தகுந்த நடவடிக்கை எடுத்து, அவர்களுக்கு பாதுகாப்பு கொடுக்குமா ?...(மணியடிக்கப்பெற்றது)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. ஹேமச்சந்திரன், ஏற்கெனவே அமைச்சர் இதுபற்றிச் சொன்னார். இதுசம்பந்தமாக முதலமைச்சரவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு போவேன் என்று சொல்லியிருக்கிறார். அதனாலே, பிரச்சினையை விட்டுவிடுங்கள்.

வினா எண் 24, திரு. கே.கே. சிவசாமி, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

24–

இரட்டைச் சாலை

***6830–திரு. கே.கே. சிவசாமி:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவில்லிப்புத்தூரிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை, திருவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர் மற்றும் சாத்தூர் ஆகிய தொகுதிகளில் இரட்டைச் சாலையாகவுள்ள அச்சாலை அருப்புக்கோட்டை தொகுதியில் மட்டும் இரட்டைச் சாலையாக ஆக்கப்படாமல் உள்ளது அரசிற்குத் தெரியுமா ?

2001 ஆகஸ்ட் 28]

(ஆ) ஆம் எனில், அருப்புக்கோட்டைத் தொகுதியிலுள்ள 35 கி.மீ. நீளமுள்ள சாலையையும் இரட்டைச் சாலையாக அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) 33.86 கி.மீ. நீளமுள்ள இச்சாலைப் பகுதியை இரட்டைச்சாலையாக மாற்ற சுமார் 10 கோடியே 84 இலட்சம் தேவைப்படும் என்பதால் தற்பொழுது உள்ள நிதிநிலைமையில் இப்பணியை அண்மைக் காலத்தில் மேற்கொள்ளும் சாத்தியக்கூறுகள் இல்லை.

திரு. கே.கே. சிவசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவில்லிப்புத்தூரிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் மாநில நெடுஞ்சாலை திருவில்லிப்புத்தூர், சிவகாசி, விருதுநகர் மற்றும் சாத்தூர் ஆகிய தொகுதிகளில் இரட்டைச் சாலையாகச் செல்கின்றது. அருப்புக்கோட்டை தொகுதியில் மட்டுமே அது இரட்டைச் சாலையாக ஆக்கப்படாமல் உள்ளது. இது, எந்த நிதியாண்டில் இரட்டைச் சாலையாக ஆக்கப்படும் என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 11–10

மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அருப்புக்கோட்டையிலிருந்து பார்த்திபனூர் வரை செல்லும் சாலையிலே, அங்குள்ள பகுதியிலே Passenger Car Unit என்ற கணக்கின் பிரகாரம் இப்பொழுது 3171 பி.சி.யூ.தான் இருக்கிறது. அது பத்தாயிரத்திற்கு எப்பொழுது வருகிறதோ அப்பொழுதுதான் அந்தச் சாலை இரட்டைச் சாலையாக மாற்றப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.